பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**04 12 2025 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** அத்தியாவசியப் பொருட்கள் மீது சுகாதார பாதுகாப்புக்கான **Cess** வரி விதிக்கப்படாது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் உறுதியளித்துள்ளார்.

**2)** பழங்குடியினர் கிராம மேம்பாட்டுத்திட்டத்திற்கு, **80** ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

**3)** திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பாக, மாநில அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு இன்று தள்ளுபடி செய்தது.

**4)** தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

அத்தியாவசியப் பொருட்கள் மீது சுகாதார பாதுகாப்புக்கான **Cess** வரி விதிக்கப்படாது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் உறுதியளித்துள்ளார்.

மக்களவையில் இன்று தேசிய பாதுகாப்பு வரி மசோதா மீதான விவாதத்தில் பேசிய அவர், பான் மசாலா போன்ற பொருட்கள் மீது அதிக வரி சுமத்தப்படும் என்று கூறினார்.

அதிக வரி விதிப்பின்மூலம் பான் மசாலா பொருட்களின் பயன்பாடு குறையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் கிடைக்கும் வருவாய் மாநில அரசுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று கூறிய திருமதி நிர்மலா சீதாராமன், இந்த நிதி சுகாதார மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இதனிடையே, புகையிலைப் பொருட்களுக்கான விற்பனை வரி மற்றும் செஸ் வரியை உயர்த்துவதற்கான திருத்த மசோதாவை மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி இன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்தார்.

இந்த மசோதாவுக்கு மக்களவையில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

பழங்குடியினர் கிராம மேம்பாட்டுத்திட்டத்திற்கு, **80** ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், **63** ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் சுகாதாரம், கல்வி, மின்சார வசதி போன்றவை இத்திட்டத்தின்மூலம் நிறைவேற்றப்படும் என்றும் கூறினார்.

முதல் முறையாக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பழங்குடியின மக்களின் நலனுக்காக அதிக அளவு நிதியை ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**75-**க்கும் மேற்பட்ட பின்தங்கிய பழங்குடியின குழுக்களின் மேம்பாட்டிற்காக இத்திட்டத்தின்கீழ் **54** ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும் திரு ஜுவல் ஓரம் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவதற்கு தனி நீதிபதி வழங்கிய தீர்ப்பை ரத்து செய்யக்கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு இன்று தள்ளுபடி செய்தது.

நீதிபதிகள் திரு ஜெயச்சந்திரன், திரு ராமகிருஷ்ணன் ஆகியோர் இன்று வழங்கிய உத்தரவில் காவல்துறை பாதுகாப்பை வழங்க தவறிய காரணத்தாலேயே மத்திய தொழிலக பாதுகாப்புப்படையினரை அனுப்ப தனி நீதிபதி உத்தரவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

தனி நீதிபதி திரு ஜி ஆர் சுவாமிநாதன் நேற்று வழங்கிய உத்தரவில் தவறு ஏதும் இருப்பதாக தெரியவில்லை என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இதனிடையே, திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பாக மாநில அரசு தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு மனுவை, உயர்நீதிமன்ற மதுரை கிளை தள்ளுபடி செய்திருப்பதன்மூலம், நீதி நிலைநாட்டப்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாநிலத்தில் ஆளும் திமுக அரசு மக்களின் உணர்வுகளை இனிமேலாவது புரிந்துகொண்டு நடந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஆளும் திமுக அரசு செயல்பட்டு

வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாப, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு தரமற்ற நூல் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனால், வேட்டி-சேலை வழங்கும் திட்டத்திற்காக தயாரிக்கப்படும் துணிகளின் தரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு வேட்டி-சேலைகள் திருப்பி அனுப்பப்படுவதால் அவை பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை 99 புள்ளி ஏழு ஒன்று சதவீத விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 6 கோடியே, 39 லட்சத்து 31 ஆயிரம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 97 புள்ளி இரண்டு ஐந்து சதவீத விண்ணப்பங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கணக்கீட்டுப்படிவங்கள் முழுமையாக பெறப்பட்டு, பதிவேற்றம் செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — Collector அழகுமீனா - 48 Sec.)***

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் - 47 Sec. )***

இதனிடையே, தொடர் மழையால் விழுப்புரம் மாவட்டம் விடூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதன் காரணமாக, அணையிலிருந்து வினாடிக்கு ஆயிரத்து 800 கனஅடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருவதால் கரையோரப்பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சி மாவட்டம் டிவிஎஸ் டோல்கேட் பகுதியில் **290** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் நூலகத்திற்கான கட்டிடப் பணிகளை மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆய்வு செய்தார்.

----------------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி அலுவலக வளாகத்தில் தூய்மை பணியாளர்களுக்கு புயல் நிவாரண பொருட்களை மாநில அமைச்சர் திரு நாசர் வழங்கினார்.

---------------

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகே சிறுத்தைகள் தாக்கியதில் மூன்று ஆடுகள் உயிரிழந்தன.

---------------

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. குமரகுருபரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------------

சென்னையில், தாயுமானவர் திட்டத்தின்கீழ், **65** வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வரும் **6-**ஆம் தேதிமுதல், **10-**ஆம் தேதிவரை அவர்களின் வீடுகளுக்கே சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்கள் விநியோகிக்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

--------------------

சபரிமலை ஐய்யப்பன் கோவில் பக்தர்களின் வசதிக்காக, தெலங்கானா மாநிலம், **Sirpur Kagaznagar-**லிருந்து காட்பாடி, சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக கேரள மாநிலம், கொல்லத்திற்கு வரும் **13**ஆம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **16-21, 21-16, 21-19** என்ற செட் கணக்கில், **Pranay Shettigar-**ஐ வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Tharun Mannepalli, Sansar Saraswat, Tushar Suvver, Saneeth Dayanand** ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அனுபமா உபாத்யாயா, அஸ்மிதா சாலிகா, தன்வி சர்மா, தஸ்னிம் மிர், தன்யா ஹேமந்த் ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

குவாலியர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன் ஷா, நிதின் குமார் சின்ஹா, திக் விஜய் பிரதாப் சிங், ரோஹன் மெஹ்ரா, ராகவ், அபினவ் சண்முகம், **Maan Kesharwani** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<END>>>>>**